# جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالزلفي

## مشروع تَعَلَّم الإسلام – السيرة النبوية

*பாடம் - 1*

الدرس الأول

## நபித்துவத்திற்கு முந்தைய அரபுகளின் நிலை

## حالة العرب قبل البعثة

சிலை வணக்கம்தான் அன்றைய அரபியர்களிடம் வியாபித்திருந்த மார்க்கமாக இருந்தது. நேரிய மார்க்கத்திற்கு முரண்பட்ட இந்தச் சிலை வணக்கத்தை அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டதால் அவர்கள் வாழ்ந்த காலம் அறியாமைக் காலமென அழைக்கப்பட்டது. ஏக இறைவனாகிய அல்லாஹ்வை விடுத்து அவர்கள் வணங்கி வந்த தெய்வங்களில் பிரபலமானவை லாத், மனாத், உஸ்ஸா, ஹுபல் ஆகியவையாகும். ஆயினும் யூத, கிறிஸ்தவ மதத்தவர்களும், நெருப்பை வணங்குபவர்களும் அரபியர்களில் இருந்தனர். மேலும் இப்ராஹீம் (அலை) அவர்களின் மார்க்கமாகிய ஓரிறைக் கொள்கையைக் கடைபிடித்து வந்த வெகு சிலரும் அவர்களில் இருந்தனர்.

பொருளாதார நிலையைப் பொறுத்தவரை கிராமவாசிகள் மேய்ச்சலைச் சார்ந்திருக்கக்கூடிய கால்நடைகளின் வருவாயையே முழுக்க முழுக்க நம்பி வாழ்ந்து வந்தனர். நகரவாசிகளிடம் பொருளாதார வாழ்க்கையின் அடிப்படை வியாபாரமும் விவசாயமுமாக இருந்தது. இஸ்லாம் வருவதற்கு சிறிது முன்னர் அரபுத் தீபகற்பத்தில் மக்கா நகர் மிகப் பெரும் வியாபாரத் தலமாகத்திகழ்ந்து வந்தது. அங்கு பல்வேறு பகுதிகளில் வீடுகளின் அமைப்புகளும் பழக்க வழக்கங்களும் நாகரிகமான முறையில் இருந்தன.

சமூக வாழ்வைப் பொறுத்தவரை அநீதி- அக்கிரமம் பெருமளவில் பரவிக் கிடந்தது. அங்கு பலவீனர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. பெண் குழந்தைகள் உயிருடன் புதைக்கப்பட்டனர். புனிதமானவை எனக் கருதப் பட்டவை அலட்சியப்படுத்தப்பட்டன. பலமுள்ளவர்கள் பலவீனர்களின் உரிமை களைச் சுரண்டித் தின்றனர். கணக்கின்றி பல மனைவியரை வைத்திருந்தனர். விபச்சாரம் பரவிக் கிடந்தது. அற்பக் காரணங்களுக்காக பல குலங்களிடையே போர்கள் நடந்து கொண்டிருந்தன. இதுவே இஸ்லாம் தோன்றுவதற்கு முன் அரபுநாட்டின் சூழ்நிலை குறித்த சுருக்கமான கண்ணோட்டமாகும்.

**பலியிடப்பட்ட இருவரின் மகன் -** குறைஷிகள் நபிகள் நாயகத்தின் பாட்டனார் அப்துல் முத்தலிபிடம் தங்களின் சந்ததியினரையும் செல்வத்தையும் குறித்து பெருமையடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அப்துல் முத்தலிப், தனக்கு பத்து ஆண்மக்களை அல்லாஹ் கொடுத்தால் அவர்களில் ஒருவரை தெய்வங்களுக்கு அறுத்துப் பலியிடுவதாக நேர்ச்சை செய்துகொண்டார். அவர் விரும்பியது நடந்தது. அவருக்கு பத்து ஆண் மக்கள் பிறந்தனர். அவர்களில் ஒருவர் தான் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் தகப்பனார் அப்துல்லாஹ். அப்துல் முத்தலிப் தனது நேர்ச்சையை நிறைவேற்ற நாடியபோது தனது பிள்ளைகளிடையே சீட்டுக் குலுக்கிப் போட்டார். அதில் அப்துல்லாஹ்வின் பெயர் வந்தது. அவரை அறுத்துப் பலியிட நாடியபோது இது மக்களிடம் தவறான முன்னுதாரணமாக ஆகிவிடக்கூடாதென மக்கள் அவரைத் தடுத்தனர். பிறகு அப்துல்லாஹ்வா அல்லது அவருக்கு ஈடாக பத்து ஒட்டகமா? எனச் சீட்டுக் குலுக்கி எடுக்க வேண்டுமென அனைவரும் முடிவு செய்தனர்.

அவ்வாறு சீட்டுக் குலுக்கிப் போட்டபோது அப்துல்லாஹ்வின் பெயரே அதில் வந்தது. அதனால் ஒட்டகங்களின் எண்ணிக்கையை இருமடங்காக்கினர். மீண்டும் சீட்டுக் குலுக்கிப் போட்டதில் அப்துல்லாஹ்வின் பெயரே திரும்பவும் வந்தது. ஆகவே ஒட்டகங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தலாயினர். இவ்வாறு தொடர்ந்து சீட்டுக் குலுக்கிப் போட்டதில் அப்துல்லாஹ்வின் பெயரே அதில் வரவும் ஒட்டகங்களின் எண்ணிக்கை நூறை எட்டியது. ஆப்போது தான் சீட்டும் ஒட்டகங்களின் பெயருக்கு வந்தது. அப்துல் முத்தலிப் தனது மகன் அப்துல்லாஹ்வுக்குப் பகரமாக அந்த ஒட்டகங்களை அறுத்தார்.

அப்துல் முத்தலிப் தமது பிள்ளைகளில் அப்துல்லாஹ் மீது மிகப் பிரியமானவராக இருந்தார். குறிப்பாக இந்த சம்பவத்திற்குப் பிறகு! அப்துல்லாஹ் பெரியவரானதும் அவரின் தகப்பனார் பனூஸஹ்ரா கோத்திரத்தில் வஹ்ப் என்பவரின் மகளான ஆமினா என்ற வாலிபப் பெண்ணைத் தேர்வு செய்து அவருக்கு மண முடித்து வைத்தார். ஆமினா கர்ப்பமானாள். அவள் கருவுற்ற மூன்றாம் மாதம் அப்துல்லாஹ் வியாபாரக் கூட்டத்துடன் சிரியா நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார். திரும்பி வரும் வழியில் நோய்வாய்ப்பட்டார். எனவே மதீனாவில் பனூநஜ்ஜார் கோத்திரத்தைச் சேர்ந்த தனது மாமன்மார்களிடத்தில் தங்கியிருந்தார். அங்கேயே அவருக்கு மரணம் ஏற்பட்டு அடக்கமும் செய்யப்பட்டார்.

ஆமினாவுக்கு கர்ப்பகாலம் முடிந்து ஒரு திங்கள் கிழமை அன்று நபிகள் நாயகம் (ஸல்) பிறந்தார்கள். ஆயினும் அவர்கள் இன்ன தேதியில், இன்ன மாதத்தில் பிறந்தார்கள் என்பதற்கு எந்த வரலாற்றுக் குறிப்பும் இல்லை. சில அறிவிப்பில் ரபீவுல் அவ்வல் 9 என்றும், சில அறிவிப்பில் 12 என்றும், இன்னும் சில அறிவிப்பில் ரமலான் என்றும் வந்துள்ளது. இன்னும் பல அறிவிப்புகளும் உள்ளன. ஆனாலும் நபிகள் நாயகத்தின் பிறப்பு கி.பி.570 (மற்றொரு அறிவிப் பின்படி 571) ஆம் ஆண்டு நடந்தது. அப்போது அது யானை ஆண்டாக இருந்தது.